
# ஆனந்த மேடம்



ல் அமர் ஓங்கார
யிறஞ்சுவோம் யாமே.

1300

JPL
C1300

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை நினைவு வெளியீடு :

# ஆனந்த மேடம்

(பேரின்ப கவசம்)

★

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

KOHA-JPL

தொகுத்தவர் :

கா. சிவகுருநாதன்
கொழும்பு அருளொளி நிலையம்


★

83515

பதிப்பித்தோர்.
கொழும்பு அருளொளி அச்சகம்
31/21, டோசன் வீதி
கொழும்பு - 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

294.



ஆழி சூழுலக மெலாம் அமைதிமேவ,
ஆகாத பகை யொழிந்து அன்புண்டாக,
ஆறாத கவலை பிணி அகன்றுபோக,
ஆக்கமொடு மக்கள் குலம் அழகாய்வாழ,
ஆண்டவனை வேண்டுதல் செய் தருளைநாடி,
ஆனந்தத் தவநிலையை அணுகுவோமே !

சித்ரமுத்து அடிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி

# முன்னுரை

நெறிபட்ட சற்குரு நேர்வழி காட்டில்
பிறிவற்றிருக்குஞ் சிவம். ஔவையார்.

உலக நித்தியாநித்திய வஸ்த்து விவேகம் பெற்று குரு லிங்க சங்கமத்துள் நின்று உழைத்தவர்கள் யாபேரும் இந்தப் பிறப்பினின்றேறி, ஏகாந்தமாயிருப்பார்கள். இவர்கள் மனம் இறைவனிடத்திற் பதிந்து, அன்புடையதாய் மோன நிலையை பொருந்தியிருக்கும்.

இவர்கள் ஊன உடலை விட்டகல நேரிடுங்காலம் இறையருள் ஒளிவெளியில் கரந்துவிடுவார்கள் - இறவாத்தானத் தறவோன் பாதம் நண்ணி விடுவார்கள்.

1954ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 12ந் திகதி தென் இந்திய தல யாத்திரையை முடித்துத் திரும்புகையில்;

''மூர்த்தி, தலம், தீர்த்தம், முறையே தரிசித்தோர்க்கு
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.''

என்றபடி மண்டபங் காம்பிலே எமது பூர்வ புண்ணிய வசத்தாலும் அருள்திரு சித்திரமுத்தடிகளின் திருக்கருணையினுலும் அவரிடம் திருவடி தீட்சை பெற்று அருட்பெருஞ் சோதியில் திளைக்கும் பேற்றினை நானும் எனது நல்லறத் துணைவியாரும் பெற்றேம். அன்று தொட்டு அனுதினமும் அத்திருவருட் சோதியில் மனத்தை நாட்டி வழிபட்டு வருவதானேம்.

எமது துணைவியார் சோதி வழிபாட்டில் முதன்மை பெற்றவராயிருந்தார். இரு மாதங்களுக்கு முன் தான் உள்ளொளியிற் கண்ட சில அற்புதக் காட்சிகளைப்பற்றிக் கூறித் தன்னை ஒரு அசரீரி ''சோதியிற் கரப்பாய்'' என்று கூறியதாயும் தன் ஆன்மா ஜோதியில் கலக்கும் என்றும் கூறியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னொரு தினம். ''ஐயா நீங்களிருக்கும்போதே நான் இந்த ஊனுடலை விட்டு நீங்கவேண்டும்'' என்றும் அப்போது தான் தன் ஆன்மா சாந்தியடையும் என்றும் கூறினார்.

அன்னாரின் ஆத்மதாகம் நிறைவேறும் காலம் அண்மிய தாற் போலும் 5-4-74ல் மார்புவலி என்று இரத்தினம் மருத் துவமனைக்குச் சென்றார். சென்றவர் ஒய்வுக்காக ஒரு வாரம் தங்கினார் மிக மகழ்ச்சியாகவும் சுகமாகவும் காட்சி தந்தார்.

12ந் திகதி மாலை 6-00 மணிக்கு ஒரு மயக்க நிலை எய்தி னார். அவ்வேளை தன்னை ஏதோ ஒரு சக்தி அந்தரமார்க்க மாக உயர உயர உயரத் தூக்கிச் செல்வதாகக் கூறினார். பின் 13ந் திகதியும் அதே வேளையில் முன்போன்றே மயக்கமுற்றார். அப்போ முருகன் மயில்மேல் வந்து தன்னை அழைப்பதாயும் வள்ளியுடன் சேர வரும்படி கூறுவதாயும் சொன்னார்.

மயக்கம் நீங்கியபோது, வருடப் பிறப்பிற்கு இல்லத் தைக் கழுவி, பாலமுது பொங்கி, ஜோதி வழிபாடு செய்து சுவாமிக்கு அமுது படைத்து தனக்குப் பிரசாதம் கொண்டு வருக என மக்களுக்கு பணித்து, 14ந் திகதி காலை தன் உட லைத் தூய்மை செய்து சீவி முடித்து திருநீறிட்டு, குங்குமம் சாத்தி தன்னை அழகு செய்து மங்களகரமாக விளங்கினார்.

அன்று பகல் பாலமுதுப் பிரசாதத்துடன் சென்றபோது அவர் மயக்க நிலையில் இருந்தார் அந்நிலையில் 'ஆயிரங்கோடிச் சூரியப் பிரகாச மச்சு மாளிகை வீட்டை கண்டு களிகொண்டு ஆனந்தப் பரவசப்பட்டு பேரின்ப வெளியில் இருப்பதாக கூறினார். இடையே, என்னையும், இளைய மகனையும் கேட்டார். இளைய மகன் பக்கத்திலிருக்கவும் கண் திறந்து ''அட அந்த அற்புதக் காட்சி மறைந்ததே. நான் மீண்டும் இந்த இருள றைக்கு வந்துவிட்டேனே'' என்று வருந்தினார்.

மகனிடம் அடி வயிற்றினின்றும் ஒரு அக்கினிச் சுவாலை கிளர்ந்தெழுந்து மேல்நோக்கி வந்ததாகவும் அது தன்னை அந்தரமார்க்கமாகத் தூக்கிச் சென்றதாகவும் அப்போ தனக்கு உலக நினைவு அற்றுவிட்டதாகவும் கூறித் தான் கண்டதாக முற்கூறிய அற்புதக் காட்சியையும் விளக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏதற்கம்மா கவலைப்படுகிறீர்கள் பயப்படவேண்டாம்'' என மகன் கூறவும் ''எனக்கென்ன கவலை பிள்ளைகள் நீங்கள் அருகிலிருக்க, அப்பன் துணையிருக்க ஒரு பயமும் இல்லை என்ருர்'' பின் சுகமாக பால் அருந்தி, இளநீர் குடித்து அமைதியாக இருந்தார். மாலை 3-45 மணியளவில் நான் சென்ற போது பேசமுடியாது நா வரட்சியுற்றிருப்பதாகக் கூறினுர். என் கையைப்பற்றித் தன் கரத்தே பிடித்துக்கொண்டார். பக்கத்தில் நின்ற மகள் யோகேஸ்வரியைத் தன்னை அணைத்துக் கொள்ளச் சொன்னுர். அவ்வணைப்புடன் சரியாக மாலை 4 மணிக்கு எவ்வித சலனமும் இன்றி இன்பமயமான ஜோதியில் மீண்டும் திளைத்து அமைதியானுர். பின் நினைவு மீளவேயில்லை.

அம்மையின் ஒடுக்கம் தன்னைத் தடுத்தாட்கொண்ட சற்குருநாதன் சித்ரமுத்தனின் பிறந்த நாளாகிய ஆனந்த வருடம் சித்திரை மாதம் முதலாம் திகதியில் ஏற்பட்டது. அதுவன்றி அன்றைய தினம் நான் பிறந்த ஞாயிறு வாரம் மூல நட்சத்திரமும் ஆக அமைந்திருக்கிறது.

அம்மையார் முதன் முறை மயக்க மடைந்தது தான் மண்டபங் காம்பில் அருட்பிரகாசத் திருவடி தீட்சைபெற்ற ஏப்பிரல் 12ந் திகதியிலாகும். இவையாவும் பொருந்தி வந்தமை மாபெரும் வியப்பே !

'' எண்ணிய எண்ணியாங் கெய்துவர்
எண்ணியர் திண்ணியராகப் பெறின்'' என்றபடி

எம தரும்பெருந்தேவி அம்மா காமாட்சி இன்பத்திலும் துன்பத்திலும் மாசற்ற கொள்கையுடையவராய், ஆசான் காட்டிய அறநெறி நின்று, அருளொளி வளி பாடியற்றி, அதற்கே ஆளாகிச் சோதியில் சோதியாய்க் கலந்துவிட்டார். அதுவே சிவநெறியெனத் தேர்ந்து சவநெறிப் பட்டோருக்குச் செய்யும் தீக்கடன், நீர்க்கடன், எட்டுச் செலவு, அந்தியேட்டி, ஆண்டுத் திவசம் யாவும் அபத்தமெனக் கருதி அவற்றைச் செய்யா தொழித்து அவ்வத்தினங்களில் அருளொளி விளக்கேற்றி ஆன்ம நேய ஒருமைப் பாட்டிற்கு பிரார்த்தனை செய்து ஏழைகட்கு உணவழிக்கிருேம்.

ச. கார்த்திகேசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணும் தெய்வம்....!

நான் ஒரு மனிதன்! ஆம்! ஆறறிவு படைத்தவன். இறைவன் என்னை ஆறறிவோடு படைத்து 'உன்னையே நீ அறிவாய்' என ஆணையிட்டான்.

நான் யார்? எங்கிருந்து வந்தேன்? ஏன் வந்தேன்? என்னை ஆக்கியவன் யார்?

சிந்தித்தேன் .. சிந்தித்தேன் ..

நான் பிறவிகளில் உயர்ந்த பிறவி. இறைவன் தன்னைப் போல என்னையும் படைத்திருந்தான்.

பத்துத் திங்கள் தன் வயிற்றில் தன் உதிரத்தையும் ஊனையும் உருக்கி எனக்கு உருவமைத்தாள் ஒரு பெண். பத்துத் திங்களின்பின் அவளை மரண வேதனைக்குள்ளாக்கி நான் பிறந்தேன்

அவளைப்போல எனக்கு உருவம் அமைந்திருந்தது. இங்கும் அவள் விட்டுவிடவில்லை.

தன்னுதிரத்தை பாலாக எனக்கு ஊட்டினாள். நான் நோயுற்றபோது தான் மருந்துண்டாள். அழுதபொழுது அவளும் அழுதாள். சிரித்தபொது அவளும் சிரித்தாள்.

இவளுக்கு என்னிடத்தில் ஏன் இந்தப் பரிவு? அதுதான் எனக்குப் புரியவில்லை. புரிந்தபோது...

அவள் என்னுள் ஐக்கியமாகி விட்டாள். என் சிந்தையெல்லாம் நிறைந்துவிட்டாள்.

ஆம்! அவள்தான் உலகில் காட்சிக்கு எளிய தெய்வம். அவள் பெயர்......" அம்மா !"

— சிவகுருநாதன்

தாயோடறு சுவைபோம் தந்தையொடு கல்விபோம்
சேயோடுதான் பெற்ற செல்வம்போம்—மாயவாழ்வு
உற்றாருடன்போம் உடன்பிறப்பால் தோள்வலிபோம்
பொற்றாலி யோடெவையும் போம்.

நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா உண்டிபாழ்
ஆறில்லா ஊருக் கழகுபாழ் - மாறில்
உடன் பிறப்பில்லா உடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லாமனை.

- ஔவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

குற்றங் குறையின்றி குரு நாதன் சொற்றவரு
நற்றவங்கள் செய்து நலனுற்றால் — பற்றறுத்து
தில்லைவளர் நாதன் திருவருளைக் கூடி
வல்வினை களற் றிருக் கலாம்.

— சித்ரமுத்தடிகள்.



கொழும்பு அருளொளி நிலையத்தருள் அன்னை

# திருமதி கார்த்திகேசு காமாட்சி அம்மா

தோற்றம்
20-11-1915.

ஒடுக்கம்
14-4-1974.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி

ஸ்ரீசத். சித்ரமுத்து அடிகள்
''அருளொளி மடம்''

அழகன்குளம் போஸ்ட்,
இராமநாதபுரம் ஜில்லா,
தமிழ்நாடு

எமதன்னை காமாட்சி அவர்கட்கு எழுதிய மடல்.

எமதரிய தவத்தாயே! தங்களுடைய பதிபக்தியை அடியேனுடைய இதய கமலத்தில் வைத்து வணங்கி வாழ்த்தி வருவோம்.

தங்களுடைய கற்புடைய தூய வாழ்வுதான் கடவுள் கிருபையாகிய அருளொளியாகும். சுபம்.

சித்ரமுத்தன்.

வெற்றி

நலமுண்டாக நமது ஆசி!

எமது தவப் பாலகியாகிய காமாட்சிக்கு யாமாகிய அடியேன் எழுதிய மடல்.

மகளே! அண்டசராசரமெங்கும் ஒன்றாக நிறைந்திருக்கும் தேவனுடைய திருவடி நிழலாகிய ஒளியைக் காண உங்கள் கண்கள் எத்தனை காலம் தவம் செய்தனவோ.

தாயே! தேடி வந்து நாம்தந்த திருவருள் திரவியத்தை மூடி வைத்துப் பாதுகாக்கவேண்டியது முக்கியமல்லவா! கொடையாளியாக இருக்கவேண்டுவது அவசியமே யெனினும் ஓட்டாண்டியாக மட்டிலும் போய்விடக்கூடாதம்மா!

அன்னையே! தரிசனங்கள் பிரகாசிக்கட்டும் தியானத்தை, நீங்களும் உங்கள் பதியாகிய நமது தெய்வத் திருப்பாலகருமாக உயர்த்திக்கொண்டே ஆவன யாவையும் செய்யுங்கள்.

18-10-54

சித்ரமுத்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியுண்டாம்

அருளொளிமாதா துணை

எமது குணக்குன்றமே, மனமலரே, மகா தெய்வீகமே, என்று கொண்டாடத்தக்க தாயே, காமாட்சியே, கார்த்தி கேசுக்குரிய வாழ்க்கைத் துணைவியே, நீங்கள் வாழ்க, வாழ்க. உங்கள் பத்தாவுடன் பக்திக் கடலில் மூழ்கிச் சதாகாலமும், பரமானந்தமுடன் வாழ்வீர்களாக.


தாயே, நமது நிலையத்தில் அருளொளி காணும் மக்கள் சகலருக்கும், ஏழையாகிய அடியேனுடைய ஆசியைச் சமர்ப்பி யுங்கள் நன்மையுண்டாம், நாட்டத்தைமட்டும் மறக்க வேண்டாம்.

மகளே, கள்ளமில்லாத உள்ளத்தில், கருணை பொங்கா மலா, தங்களுக்குக் கார்த்திகேசன் என்ற, கணவன் கிடைத் திருக்கக்கூடும். கிட்டிய பொருளைக் கெட்டியாகப் பற்றிப் பிடியம்மா, விட்டுவிடாதீர்கள்; என்றுங்களுக்குச் சொல்லா மலே சொல்ல விரும்புகின்றோம்.

ஏனம்மா, வள்ளிக்கொடியாளை என்றது, புள்ளி மானென்ற கதையை, நீங்கள் ஒப்புக்கொள்ளத்தானு வேண் டும். இல்லையென்று மறுக்கவும் இடமில்லையோ? சற்றெண் ணிப்பாருங்கள். எல்லாம் புத்துயிர் மயமாகத் தோற்றமளிக் கும். ஆதலால், நாம் செத்துப்போகாத விசயங்கள் யாவும் இதற்குள் அடக்கமம்மா, அதிருக்கட்டும். லௌகீகக் கயிற்றி லும் கண்ணிருக்கட்டும். இம்மதி எம்மதியாருக்கும் பொருந் தும். ... ............ ..... ...........

29-5-55 சித்ரமுத்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெற்றி

## ஆத்ம சாந்தி நிலையம்,

அருளொளி ஓங்கித்
திருவருள் பெருகுக!

எல்லாம் திருவருட் சம்மதம்
சுபம்

நலம் உண்டாம்
குறையணுகாது!

திருவளரும்

எமது தவப் பெரியாராகிய கார்த்திகேசு அவர்கட்கு ஆசி வழங்கி எழுதிய மடல் - எமது அருமைத் தாய் காமாட்சியம்மாள் சிவபதவி சேர்ந்தது அறிந்தோம். அவர்களுடைய ஆத்மா ஆத்ம நாதனுடைய திருவடியில் ஐக்கியமாகி உபசாந்தி யடைந்துவிட்டது. ..... ......................................

உங்கள்
சித்ரமுத்தன்.

பனைக்குளம் அஞ்சல்,
இராமநாதபுரம் மாவட்டம்,
தமிழ்நாடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ மனம் விரிந்து குவிந்தது மாதவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ காமாட்சியம்மை துதி

பத்து விரல் மோதிரமது எத்தனை பிரகாசம்
பாடகந் தண்டை கொலுசும்;
பச்சை வைடூர்ய மிச்சையா யிழைத்திட்ட
பாதச் சிலம்பி னொளியும்;
முத்து மூக்குத்தியும் ரத்தினப் பதக்கமும்
மோகன மாலை யழகும்;
முழுதும் வைடூர்ய புட்பரா கத்தினால்
முடிந்திட்ட தாலி யழகும்
சுத்தமா யிருக்கின்ற காதினிற் கம்மலும்
செங்கையிற் பொன் கங்கணம்;
செகமெலாம் விலைபெற்ற முகமெலாம் ஒளியுற்ற
சிறு காது கொப்பி னழகும்;
அத்தி வரதன் தங்கை சத்தி சிவ ரூபத்தை
அடியனாற் சொல்லத் திறமோ!
அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும்
அம்மை காமாட்சி யுமையே. காமாட்சி விருத்தம்



அம்மாவுக் கோர் உவமை அம்மாவே!
அம்மாவைத் தெய்வமென்போர்
சும்மாபொய் சொல்லுகிறார்! துன்பமெனில்
ஓடிவந்து துடிதுடித்து
நம்மோடு கிடந்துநமை அருகணைத்து
நமக்காக அழுதுவிம்மும்
அம்மாவைத் தெய்வமெனில் இதுவரைக்கும்
அழுததெய்வம் அறியேனம்மா! - காசி ஆனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் விரிந்து குவிந்தது வாயுவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

# அன்புறு அன்னையே!




கண்ணிரு மணையாம்காதலர்கூடி, பண்ணிட ஈமக் கடமைகள் யாவும்
நண்ணிய மருமகள் நினைந்துளம் மருகிட, புண்ணியம் மிகவே பேத்தி தீ ஏந்திட
சென்னியில் விக்ன விநாயகன் அமர்ந்திட, திண்ணிய நெஞ்சினன் திருஅருட் தலைமகன்
எண்ணிய வண்ணம் ஒளியினுள் கலந்து, கண்ணிறை செய்தனை அன்புறு அன்னையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA-JPL

மனம் விரிந்து குவிந்தது மன்னுயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருள்திரு. கார்த்திகேசு சுவாமிகள்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சியானாள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தா ராசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே. - அப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் விரிந்துரை மாண்டது முத்தியே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளொளி வணக்கம்

ஜோதி ஜோதி ஜோதி ஜோதி
ஜோதியே ஜெக ஜோதியே
ஆதி ஆதி ஆதி ஆதி
ஆதியே அருளாதியே!

நீதி நிழலில் அன்று மின்றும்
நின்றிலங்குஞ் ஜோதியே
நிமல வடிவில் உலகமுழுதும்
நிறைந்த எங்கள் ஜோதியே! (ஜோதி)

விண்ணு லகமும் மண்ணு யிர்களும்
வேதவிதியும் ஜோதியே
கண்ணுளாடும் மணியும் ஒளியும்
கருணை வடிவுஞ் ஜோதியே! (ஜோதி)

அன்பு மயமும் அறிவி லுயர்வும்
ஆத்ம ஞானமுஞ் ஜோதியே
அரிய தபசு புரிய நமதுள்
எரியும் ஜோதி ஜோதியே! (ஜோதி)

திரு பெருகிய அருளொளி மயத்
தீப ஜோதி ஜோதியே
கிருபை பெருகிக் குருவருள் பெற
வருக வருக ஜோதியே! (ஜோதி)

கணபதி யொடு முரு கனுங்
கலைவா ணியும் பரஞ்ஜோதியே
கதிர்மதி யொடு உலகளாவிய
காரணப் பொருள் ஜோதியே! (ஜோதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆனந்தக் களிப்பு

### பல்லவி

ஜோதியுட் ஜோதியுட் ஜோதி—சுத்த
ஜோதி சிவஜோதி ஜோதியுட் ஜோதி
ஜோதியுட் ஜோதியுட் ஜோதி. ஜோதி

### சரணங்கள்

சிவமே பொருளென்று தேற்றி—என்னைச்
சிவவெளிக் கேறுஞ் சிகரத்தி லேற்றி
சிவமாக்கிக் கொண்டது பாரீர்—திருச்
சிற்றம்பலத்தே திருநட ஜோதி. ஜோதி

வித்தெல்லா மொன்றென்று நாட்டி—அதில்
விளைவு பலபல வேறென்று காட்டி
சித்தெல்லாந் தந்தது பாரீர்—திருச்
சிற்றம்பலத்தே திருநட ஜோதி. ஜோதி

சொல்வந்த அங்கங்க ளாறும்—ஒரு
சொல்லாலே ஆமென்றச் சொல்லாலே வீறும்
செல்வம் கொடுத்தது பாரீர்—திருச்
சிற்றம்பலத்தே திருநட ஜோதி. ஜோதி

தங்கோ லளவெனக் கோதிச்—சுத்த
சமரச சத்திய சன்மார்க்க நீதிச்
செங்கோ லளித்தது பாரீர்—திருச்
சிற்றம்பலத்தே திருநட ஜோதி. ஜோதி

ஆபத்தை நீக்கி வளர்த்தே—சற்றும்
அசையாமல் அவியாமல் அடியே னுளத்தே
தீபத்தை வைத்தது பாரீர்—திருச்
சிற்றம்பலத்தே திருநட ஜோதி. ஜோதி

தன்பால் வருபவர்க்கின்றே—அருள்
ஈகின்றேன் ஈகின்றேன் ஈகின்றேனென்றே
தென்பா லிருந்தது பாரீர்—திருச்
சிற்றம்பலத்தே திருநட ஜோதி. ஜோதி

நவவெளி நால்வகை யாகி—ஒரு
நடுவெளிக் குள்ளே நடத்திய நீதி
சிவவெளி யாமிது பாரீர்—திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமபொரு ளெம்பொரு ளென்றே—சொல்லும்
எல்லாச் சமயத்து ளெல்லார்க்கு மொன்றே
செம்பொருளென்பது பாரீர்—திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி

பிறந்து பிறந்துழன் றேனை—என்றும்
பிறவா திறவாப் பெருமைதந் தானைச்
சிறந்தொளிர் வித்தது பாரீர்—திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி

பாரிடம் வானிட மற்றும்—இடம்
பற்றிய முத்தர்கள் சித்தர்கள் முற்றும்
சேரிட மாமிது பாரீர்—திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி

எண்ணிய வெண்ணங்க ளெல்லாம்—நான்
எண்ணிய வாறே யினிதுதந் தென்னைத்
திண்ணிய னாக்கிற்றுப் பாரீர்—திருச்
சிற்றம் பலத்தே திருநட ஜோதி. ஜோதி



## பரசிவ நிலை

அருட்ஜோதித் தெய்வ மெனை யாண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்
பொருட்சாரு மறை களெல்லாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வமுயர் நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கியொளி ஈந்தருளுந் தெய்வம்
எண்ணியநா னெண்ணியவா றெனக்கருளுந் தெய்வம்
தெருட் பாட லுவந்தெனையுஞ் சிவமாக்குந் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பள்ளி யெழுச்சி

பொழுது விடிந்ததென் னுள்ளமென் கமலம்
பூத்தது பொன்னொளி பொங்கிய தெங்குந்
தொழுதுநிற் கின்றனன் செய்பணி யெல்லாஞ்
சொல்லுதல் வேண்டுமென் வல்லசற் குருவே
முழுதுமா னென்ன வாகம வேத
முறைகளெ லாமொழி கின்றமுன் னவனே
எழுதுத லரியசீர் அருட்பெருஞ் ஜோதி
என்தந்தை யேபள்ளி யெழுந்தருள் வாயே.

துற்குண மாயை போய்த் தொலைந்தது ஞானம்
தோன்றிடப் பொன்னொளி தோற்றிய கதிர்தான்
சிற்குண வரைமிசை உதயஞ் செய்ததுமா
சித்திகள் அடிப்பணிச் செய்திடச் சூழ்ந்த
நற்குண சன்மார்க்க சங்கத்தா ரெல்லாம்
நண்ணினர் தோத்திரம் பண்ணி நிற்கின்றார்
எற்குண வளித்தவென் அருட்பெருஞ் ஜோதி
என்னம்மை யேபள்ளி யெழுந்தருள் வாயே.

நிலந்தெளிந் ததுகண மழுங்கின சுவண
நீடொளி தோன்றிற்றுக் கோடொலிக் கின்ற
அலர்ந்தது தாமரை ஆணவ இருள்போய்
அழிந்தது கழிந்தது மாயைமா லிரவு
புலர்ந்தது தொண்டரோ டண்டருங் கூடிப்
போற்றியோ சிவசிவ போற்றியென் கின்றார்
இலங்குரு வளித்தவென் அருட்பெருஞ் ஜோதி
என்குரு வேபள்ளி யெழுந்தருள் வாயே.

கல்லாய மனங்களுங் கரையப்பொன் னொளிதான்
கண்டது கங்குலும் விண்டது தொண்டர்
பல்லாரு மெய்தினர் பாடிநின் றாடிப்
பரவுகின் றாரன்பு விரவுகின் றாராய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லார்மெய்ஞ் ஞானிகள் யோகிகள் பிறரும்
நண்ணினர் சூழ்ந்தனர் புண்ணிய நிதியே
எல்லாஞ்செய் வல்லவென் அருட்பெருஞ் ஜோதி
என்தெய்வ மேபள்ளி யெழுந்தருள் வாயே.

புன்மாலை யிரவெலாம் புலர்ந்தது ஞானப்
பொருப்பின் மேற்பொற்கதிர் பொலிந்தது புலவோர்
சொன்மாலை தொடுத்தனர் துதித்துநிற் கின்றார்
சுத்த சன்மார்க்க சங்கத்தவ ரெல்லாம்
மன்மாலை மாலையா வந்துசூழ் கின்றார்
வானவர் நெருங்கினர் வாழியென் கின்றார்
என்மாலை யணிந்தவென் அருட்பெருஞ் ஜோதி
என்பதி யேபள்ளி யெழுந்தருள் வாயே.

ஒருமையி னுலகெலாம் ஓங்குக எனவே
ஊதின சின்னங்க ளூதின சங்கம்
பெருமைகொள் சமரச சுத்தசன் மார்க்கப்
பெரும்புகழ் பேசினர் பெரியவர் சூழ்ந்தார்
அருமையு மெளிமையு மாகியொன் றாகி
அம்பலத் தேசித்தி யாடல்செய் பதியே
இருமையு மளித்தவென் அருட்பெருஞ் ஜோதி
என்னரச சேபள்ளி யெழுந்தருள் வாயே.

சினைப்பள்ளித் தாமங்கள் கொணர்ந்தன ரடியார்
சிவசிவ போற்றியென் றுவகைகொள் கின்றார்
நினைப்பள்ளி யுண்ணத்தெள் ளாரமு தளிக்கும்
நேரமிந் நேரமென் றுரியர் புகன்றார்
முனைப்பள்ளி பயிற்றுதென் றனைக்கல்வி பயிற்றி
முழுதுணர் வித்துடற் பழுதெலாந் தவிர்த்தே
எனைப்பள்ளி யெழுப்பிய அருட்பெருஞ் ஜோதி
என்னப்ப னேபள்ளி யெழுந்தருள் வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதம்பிடித் தவரெல்லாம் வாய்பிடிப் புண்டு
வந்துநின் கின்றனர் வாய்திறப் பிப்பான்
கதம்பிடித் தவரெல்லாங் கடும்பிணி யாலே
கலங்கினர் சூழ்ந்தன ருலம்புறு கின்றார்
பதம்பிடித் தவரெல்லாம் அம்பலப் பாட்டே
பாடின ராடினர் பரவிநிற் கின்றார்
இதம்பிடித் தெனையாண்ட அருட்பெருஞ் ஜோதி
என்னைய னேபள்ளி யெழுந்தருள் வாயே.

மருளொடு மாயைபோய்த் தொலைந்தது மதங்கள்
வாய்மூடிக் கொண்டன மலர்ந்தது கமலம்
அருளொளி விளங்கிய தொருதிருச் சபையும்
அலங்கரிக் கின்றனர் துலங்கிவீற் றிருக்கத்
தெருளொடு பொருளுமேன்மே லெனக் களித்துச்
சித்தெலாஞ் செய்திடத் திருவருள் புரிந்தே
இருளறுத் தெனையாண்ட அருட்பெருஞ் ஜோதி
என்வள்ள லேபள்ளி யெழுந்தருள் வாயே.

அலங்கரிக்கின் றோமோர் திருச்சபை யதிலே
அமர்ந்தருட் ஜோதிகொண் டடிச்சிறி யோமை
வலம்பெறும் இறவாத வாழ்வில்வைத் திடவே
வாழ்த்துகின்றோ முன்னர் வணங்கிநிற் கின்றோம்
விலங்கிய திருளெலாம் விடிந்தது பொழுது
விரைந்தெமக் கருளுதல் வேண்டுமித்தருணம்
இலங்குநற் றருணமெம் அருட்யெருஞ் ஜோதி
என்தந்தையே பள்ளி யெழுந்தருள் வாயே.

## திருவாட்போக்கி

கூற்றம் வந்து குமைத்திடும் போதினுல்
தேற்றம் வந்து தெளிவுற லாகுமே
ஆற்ற வும்மருள் செய்யுவாட் போக்கிபால்
ஏற்று மின்விளக் கையிருள் நீங்கவே. —திருநாவுக்கரசர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவுந்தியார்

இரவு விடிந்த திணையடி வாய்த்தன
பரவி மகிழ்ந்தேனென் றுந்தீ பற
பாலமு துண்டேனென் றுந்தீ பற.

பொழுது விடிந்தது பொற்பதம் வாய்த்தன
தொழுது மகிழ்ந்தேனென் றுந்தீ பற
தூயவ ஞனேனென் றுந்தீ பற.

தூக்கந் தொலைந்தது சூரியன் ருேன்றினன்
ஏக்கந் தவிர்ந்தேனென் றுந்தீ பற
இன்னமு துண்டேனென் றுந்தீ பற.

துன்பந் தவிர்ந்தது தூக்கந் தொலைந்தது
இன்பங் கிடைத்ததென் றுந்தீ பற
எண்ணம் பலித்ததென் றுந்தீ பற.

ஞான முதித்தது நாத மொலித்தது
தீனந் தவிர்ந்ததென் றுந்தீ பற
சிற்சபை கண்டேனென் றுந்தீ பற.

திரையற்று விட்டது செஞ்சுடர் தோன்றிற்று
பரையொளி யோங்கிற்றென் றுந்தீ பற
பலித்தது பூசையென் றுந்தீ பற.

உள்ளிருள் நீங்கிற்றென் னுள்ளொளி யோங்கிற்று
தெள்ளமு துண்டேனென் றுந்தீ பற
தித்திக்க வுண்டேனென் றுந்தீ பற.

எந்தையைக் கண்டே னிடரெலா நீங்கினேன்
சிந்தை மகிழ்ந்தேனென் றுந்தீ பற
சித்திகள் பெற்றேனென் றுந்தீ பற.

தந்தையைக் கண்டேஞன் சாகா வரம்பெற்றேன்
சிந்தை களித்தேனென் றுந்தீ பற.
சித்தெலாம் வல்லேனென் றுந்தீ பற.

முத்தியைப் பெற்றேனம் முத்தியினுல் ஞான
சித்தியை யுற்றேனென் றுந்தீ பற
சித்தனு மானேனென் றுந்தீ பற.



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கதவந் திறத்தல்


திருக்கதவந் திறவாயோ திரைகளெலாந் தவிர்த்தே
திருவருளாம் பெருஞ்ஜோதித் திருவுருக் காட்டாயோ
உருக்கியமு தூற்றெடுத்தென் உடம்புயிரோ டுளமும்
ஒளிமயமே யாக்குற மெய் உணர்ச்சியரு ளாயோ
கருக்கருதாத் தனிவடிவோய் நின்னை யென்னுட் கலந்தே
கங்குல் பகலின்றி யென்றுங் களித்திடச் செய்யாயோ
செருக்கருதா தவர்க்கருளுஞ் சித்திபுரத் தரசே
சித்தசிகா மணியேயென் திருநட நாயகனே.

மணிக்கதவந் திறவாயோ மறைப்பை யெலாந் தவிர்த்தே
மாற்றறியாப் பொன்னேநின் வடிவதுகாட் டாயோ
கணிக்கறியாப் பெருநிலையிலென்னொடுநீ கலந்தே,
கரைகடந்த பெரும் போகங் கண்டிடச்செய் யாயோ
தணிக்கறியாக் காதல்மிகப் பெருகுகின்ற தரசே
தாங்கமுடி யாதினியென் தனித்தலைமைப் பதியே
திணிக்கலையா தியவெல்லாம் பணிக்கவல்ல சிவமே
சித்தசிகா மணியேயென் திருநட நாயகனே.

உரைகடந்த திருவருட்பே ரொளிவடிவைக் கலந்தே
உவட்டாத பெரும்போகம் ஓங்கியுறும் பொருட்டே
இரைகடந்தென்னுள்ளகத்தே யெழுந்துபொங்கித் ததும்பி
என் காதற் பெருவெள்ள மென்னைமுற்றும் விழுங்கிக்
கரை கடந்து போனதினித் தாங்கமுடி யாது
கண்டுகொள்வாய் நீயேயென் கருத்தின்வண்ண மரசே
திரைகடந்த குருமணியே சிவஞானமணியே
சித்த சிகாமணியேயென் திருநடநா யகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருட்ஜோதி ராமலிங்க வள்ளலார்

பத்திவரும் பழவினைகள் பறந்தோடும் மூலமலப் பகுதி மாயும்
புத்திவரும் புலைகொலைகள் புறம்போகும் ஆனந்தம் பொங்கும் சாந்த
முத்தி வரும் அழியாநன் மோக்கமுறும் முதுகடல்சூ ழுலகி லெல்லாம்
சித்திவரும் இராமலிங்க தேசிகன்றன் அருள் மாண்மைச் சிந்திப் போர்க்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்புடைநான் பிறர்போலே உடுக்க விழைந்தேனே
உண்ணவிழைந் தேனே வேறுடைமை விழைந்தேனே
அன்புடையாய் யென்றனை நீ யணைந்திடவே விழைந்தேன்
அந்தோ என் ஆசைவெள்ளம் அணைகடந்த தரசே
என்புடை வந்தணைகவென இயம்புகின்றேன் உலகோர்
என் சொலினுஞ் சொல்லுகவென் இலச்சையெலாம்
[விடுத்தேன்
தென்புடையோர் முகநோக்கித் திருப்பொது நிற்கின்றோய்
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே.

இறந்திறந்தே யிளைத்தவெலாம் போதுமிந்த வுடம்பே
இயற்கையுடம் பாகவரு ளின்னமுத மளித்தென்
புறந்தழுவி யகம் புணர்ந்தே கலந்துகொண்டெந் நாளும்
பூரணமாஞ் சிவபோகம் பொங்கியிட விழைந்தேன்
பிறந்திறந்து பொய்க்கதியைப் பெறநினைத் தேமாந்த
பேதையர்போ லெனை நினையேல் பெரியதிருக் கதவந்
திறந்தருளி யணைந்திடுவாய் சிற்சபைவா ழரசே
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே.

பொய்யுடையார் விழைகின்ற புணர்ச்சி விழைந்தேனே
பூண விழைந் தேனேவான் காண விழைந்தேனே
மெய்யுடையாய் என்னொடுநீ விளையாட விழைந்தேன்
விளையாட்டென் பதுஞானம் விளையும்விளை யாட்டே
பையுடைப்பாம் பணையரொடும் ஆடுகின்றோய் எனது
பண்பறிந் தேநண்புவைத் தபண்புடையோய் இன்னே
செய் யுடையென்னொடுகூடி யாடவெழுந்தருள் வாய்
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே.

கூறுகின்ற சமயமெலாம் மதங்களெலாம் பிடித்துக்
கூவுகின்றார் பலனொன்றுங் கொண்டறியார் வீணே
நீறுகின்றார் மண்ணாகி நாறுகின்றார் அவர்போல்
நீடுலகில் அழிந்துவிட நினைத்தேனோ நிலைமேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறுகின்ற திறம் விழைந்தேன் ஏற்றுவித்தா யாங்கே
இலங்குதிருக் கதவுதிறந் தின்னமுதம் அளித்தே
தேறுகின்ற மெய்ஞ்ஞான சித்தியுறப் புரிவாய்
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே.

வேதநெறி ஆகமத்தின் நெறி புராணங்கள்
விளம்பு நெறி இதிகாசம் விதித்தநெறி முழுதும்
ஓதுகின்ற சூதனைத்தும் உளவனைத்துங் காட்டி
உள்ளதனை உள்ளபடி உணரவுணர்த் தினையே
ஏதமற உணர்ந்தனன் வீண்போது கழிப்பதற்கோர்
எள்ளளவும் எண்ணமிலேன் என்னொடுநீ புணர்ந்தே
தீதறவே யனைத்தும் வல்ல சித்தாடல் புரிவாய்
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே.

கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக
மலைவறுசன் மார்க்கமொன்றே நிலைபெற எவ்வுலகும்
வாழ்ந்தோங்கக் கருதியருள் வழங்கினை யென்றனக்கே
உலைவருமிப் பொழுதேநற் றருணமென நீயே
உணர்த்தினைவந் தணைந்தருள்வா யுண்மை யுரைத்தவனே
சிலைநிகர்வன் மனங்கரைத்துத் திருவமுதம் அளித்தோய்
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே.

திருத்தகுமோர் தருணமிதில் திருக்கதவந் திறந்தே
திருவருட்பே ரொளிகாட்டித் திருவமுத மூட்டிக்
கருத்து மகிழ்ந்தென்னுடம்பிற் கலந்துளத்திற் கலந்து
கனிந்துயிரிற் கலந்தறிவிற் கலந்துலக மனைத்தும்
உருத்தகவே யடங்கின்ற ஊழிதொறும் பிரியா
தொன்றுகிக் காலவரை உரைப்ப வெலாங் கடந்தே
திருத்தியொடு விளங்கியரு ளாடல்செய வேண்டுஞ்
சித்தசிகா மணியேயென் திருநடநா யகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் குருநாதன்

என்னையெனக் கறிவித்தா னெங்கள் குருநாதன்
இணையடியென் தலைவைத்தா னெங்கள்குருநாதன்
அன்னைபிதாக் குருவானு னெங்கள்குருநாதன்
அவனியெல்லா மாளவைத்தா னெங்கள்குருநாதன்
முன்னைவினை நீக்கிவிட்டா னெங்கள்குருநாதன்
மூவருக்கு மறியவொண்ணு னெங்கள்குருநாதன்
நன்மைதீமை யறியாதா னெங்கள்குருநாதன்
நான்தானுய் விளங்குகின்ரு னெங்கள்குருநாதன்.

தேகம்நீ யல்லவென்ரு னெங்கள்குருநாதன்
சித்தத்திற் றிகழுகின்ரு னெங்கள்குருநாதன்
மோகத்தை முனியென்ரு னெங்கள்குருநாதன்
முத்திக்கு வித்தென்ரு னெங்கள்குருநாதன்
வேகத்தைக் கெடுத்தாண்டா னெங்கள்குருநாதன்
விண்ணும் மண்ணு மாகிநின்ரு னெங்கள்குருநாதன்
தாகத்தை யாக்கிவிட்டா னெங்கள்குருநாதன்
சத்தியத்தைக் காணவைத்தா னெங்கள்குருநாதன்.

வாசி யோகந் தேரென்ரு னெங்கள்குருநாதன்
வகாரநிலை அறியென்ரு னெங்கள்குருநாதன்
காசிதேசம் போவென்ரு னெங்கள்குருநாதன்
கங்குல்பக லில்லையென்ரு னெங்கள்குருநாதன்
நாசிநுனி நோக்கென்ரு னெங்கள்குருநாதன்
நடனந்தெ ரியுமென்ரு னெங்கள்குருநாதன்
மாசிலோசை கேட்குமென்ரு னெங்கள்குருநாதன்
மற்றுப்பற்றை நீக்கென்ரு னெங்கள்குருநாதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவழியை அடையென்று னெங்கள்குருநாதன்
எல்லாம் விளங்குமென்று னெங்கள்குருநாதன்
கருவழியைக் கடவென்று னெங்கள்குருநாதன்
கட்டுப்படும் மனமென்று னெங்கள்குருநாதன்
ஒருவரும றியாரென்று னெங்கள்குருநாதன்
ஓங்கார வழியென்று னெங்கள்குருநாதன்
நிருமலனு யிருவென்று னெங்கள்குருநாதன்
நீயேநா னென்றுசொன்ன னெங்கள்குருநாதன்.

திக்குத் திகாந்தமெல்லா மெங்கள்குருநாதன்
சித்தத்துள் நிற்கவைத்தா னெங்கள்குருநாதன்
பக்குவமாய்ப் பேணென்று னெங்கள்குருநாதன்
பார்ப்பதெல்லாம் நீயென்று னெங்கள்குருநாதன்
அக்குமணி யணியென்று னெங்கள்குருநாதன்
அஞ்செழுத்தை ஓதென்று னெங்கள்குருநாதன்
நெக்குநெக்கு உருகென்று னெங்கள்குருநாதன்
நித்தியன்நீ யென்றுசொன்ன னெங்கள்குருநாதன்.

தேடாமல் தேடென்று னெங்கள்குருநாதன்
சீவன் சிவனென்று னெங்கள்குருநாதன்
நாடாமல் நாடென்று னெங்கள்குருநாதன்
நல்லவழி தோன்றுமென்று னெங்கள்குருநாதன்
பாடாமற் பாடென்று னெங்கள்குருநாதன்
பத்தரினஞ் சேரென்று னெங்கள்குருநாதன்
வாடாமல் வழிபடென்று னெங்கள்குருநாதன்
வையகத்தில் வாழென்று னெங்கள்குருநாதன்.

தித்திக்கு மொருமொழியா லெங்கள்குருநாதன்
சின்மயத்தைக் காணவைத்தா னெங்கள்குருநாதன்
எத்திக்கு மாகிநின்று னெங்கள்குருநாதன்
எல்லாம்நீ யென்றுரைத்தா னெங்கள்குருநாதன்
வித்தின்றி நாறுசெய்வா னெங்கள்குருநாதன்
விண்ணவரு மறியவொண்ணு னெங்கள்குருநாதன்
தத்துவா தீதனுனு னெங்கள்குருநாதன்
சகல சம்பத்துந்தந்தா னெங்கள்குருநாதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியந்த மில்லையென்று னெங்கள்குருநாதன்
அதுவேநீ யென்றுரைத்தா னெங்கள்குருநாதன்
சோதிமய மென் றுசொன்ன னெங்கள்குருநாதன்
சுட்டிறந்து நில்லென்று னெங்கள்குருநாதன்
சாதி சமயமில்லா னெங்கள்குருநாதன்
தானாய் விளங்குகின்று னெங்கள்குருநாதன்
வாதியருங் காணவொண்ணு னெங்கள்குருநாதன்
வாக்கிறந்த இன்பந் தந்தா னெங்கள்குருநாதன்.

முச்சந்திக் குப்பையிலே எங்கள்குருநாதன்
முடங்கிக் கிடந்திடென்று னெங்கள்குருநாதன்
அச்சமோடு கோபமில்லா னெங்கள்குருநாதன்
ஆணவத்தை நீக்கிவிட்டா னெங்கள்குருநாதன்
பச்சைப் புரவியிலே எங்கள்குருநாதன்
பாங்காக ஏறென்று னெங்கள்குருநாதன்
தச்சன்கட்டா வீட்டிலே எங்கள்குருநாதன்
தாவுபரி கட்டென்று னெங்கள்குருநாதன்.

நாமேநா மென்றுரைத்தா னெங்கள்குருநாதன்
நமக்குக்குறை வில்லையென்று னெங்கள்குருநாதன்
போமேபோம் வினையென்று னெங்கள்குருநாதன்
போக்குவர வில்லையென்று னெங்கள்குருநாதன்
தாமேதா மென்றுரைத்தா னெங்கள்குருநான்
சங்கற்ப மில்லையென்று னெங்கள்குருநாதன்
ஓமென் றுறுதிதந்தா னெங்கள்குருநாதன்
ஊமையெழுத் தறியென்று னெங்கள்குருநாதன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

## பிரபஞ்சப் போர்

ஞானவாள் ஏந்தும்ஐயர் நாதப் பறையறைமின்
மானமா ஏறும்ஐயர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம்நாம் மாயப்படை வாராமே.



KOHA JPL
83515
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்வமிது தானே

அன்னைபிதாக் குருவாகி யாண்டுகொண்ட தெய்வம்
அடியவர்தம் மனத்திலே ருசிக்கின்ற தெய்வம்
என்னையெனக் கென்னாலே யறிவித்த தெய்வம்
எல்லாமா யல்லவுமா யிருக்கின்ற தெய்வம்
முன்னைவினை யெல்லாம் முடித்தாண்ட தெய்வம்
மூதாதை மாரெனக்குக் காட்டிவைத்த தெய்வம்
தென்னைபனை சேரிலங்கை வாழ்கின்ற தெய்வம்
சிவனென்ற நாமமுள்ள தெய்வமிது தானே.

கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பளிக்குந் தெய்வம்
காணாத காட்சியெல்லாங் காட்டுகின்ற தெய்வம்
நில்லாத நீர்ச்சடைமேல் நிற்கவைத்த தெய்வம்
நெற்றியின்மே லொற்றைக்கண் நேரவைத்த தெய்வம்
எல்லார்க்குந் தெய்வ மென்னுடைய தெய்வம்
இதையறிந்து வாழுவார் எல்லாருந் தெய்வம்
செல்லாரு மிலங்கையில் வாழ்கின்ற தெய்வம்
சிவனென்ற நாமமுள்ள தெய்வமிது தானே.

நம்பினபேர் தமக்கருளை நயந்தளிக்குந் தெய்வம்
நாதாக்கள் போற்றுகின்ற மெய்ஞ்ஞானத் தெய்வம்
வெம்பிணிக்கு மருந்தாக விளங்குகின்ற தெய்வம்
வேதாந்தத் தெய்வமுயர் சித்தாந்தத் தெய்வம்
அம்பிகைதம் பாகமா யமர்ந்திருக்குந் தெய்வம்
அவரவர்க்கு அதுவதுவா யிருக்கின்ற தெய்வம்
தும்பிமுக னறுமுகவன் தோத்திரஞ்செய் தெய்வம்
சோலைசூ ழிலங்கைவாழ் தெய்வமிது தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மைக்கும் மறுமைக்குந் துணையான தெய்வம்
எழிலாருஞ் செஞ்சடையில் மதிவைத்த தெய்வம்
அம்மையா யப்பனு யாதரிக்குந் தெய்வம்
அவனிமே லென்போல வழங்குகின்ற தெய்வம்
பொய்ம்மாயச் செருக்கெல்லாம் புறக்கணிக்குந் தெய்வம்
போதாரும் மலர் தூவிப் போற்றுகின்ற தெய்வம்
செம்மைசே ரிலங்கையிலே வாழுகின்ற தெம்வம்
சித்தத்துட் டித்திக்குந் தெய்வமிது தானே.

பொறியைந்தும் வென்றவர்பாற் பொருந்துகின்ற தெய்வம்
போக்குவர வில்லாமல் நிறைகின்ற தெய்வம்
அறிவொன்றை நினைப்பவர்பா லமர்ந்திருக்குந் தெய்வம்
அம்புவியில் மாமனுய் வழக்குரைத்த தெய்வம்
குறியொன்று மில்லாமற் கூத்தாடுந் தெய்வம்
குழந்தைவடி வேலவனைக் கொண்டாடுந் தெய்வம்
வெறிகமழுஞ் சோலைசூ ழிலங்கைவாழ் தெய்வம்
விருப்புவெறுப் பில்லாத தெய்வமிது தானே.

## சிவானந்த விளைவு

காலமுண் டாகவே காதல்செய் துய்மின் கருதரிய
ஞாலமுண் டானெடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப் பிரான்தன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் ருன்வந்து முந்துமினே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

# சொல்லு சிவமே

சொல்லு சிவமே சொல்லு சிவமே
சுகம் பெற மார்க்க மொன்று சொல்லு சிவமே
வெல்லும் பகை யொழியச் சொல்லு சிவமே
வேறு பொருளில்லை யென்று சொல்லு சிவமே
அல்லும் பகலுமறச் சொல்லு சிவமே
அன்பே சிவமென்று சொல்லு சிவமே
கல்லுங் கரையச் கவி சொல்லு சிவமே
காயமே கோயிலென்று சொல்லு சிவவே.


அல்லலற்று வாழவழி சொல்லு சிவமே
அகம்பிர மாஸ்மியென்று சொல்லு சிவமே
எல்லவர்க்கு நல்லனென்று சொல்லு சிவமே
எல்லாஞ் சிவன்செயலாய்ச் சொல்லு சிவமே
நில்லாதிவ் வாழ்வென்று சொல்லு சிவமே
நீயுநானு மொன்றென்று சொல்லு சிவமே
பொல்லாப்பிங் கில்லையென்று சொல்லு சிவமே
புத்தடியோம் நாங்களேன்று சொல்லு சிவமே.

கொல்லாமை பெரிதென்று சொல்லு சிவமே
கூசாமல் எவர் முன்னுஞ் செல்லு சிவமே
நல்லோர் நடுவிருக்கச் சொல்லு சிவமே
நாமே யனைத்துமென்று சொல்லு சிவமே
உல்லாசமா யெங்குஞ் செல்லு சிவமே
உண்மை முழுதுமென்று சொல்லு சிவமே
கல்லார்க்குங் கதியென்று சொல்லு சிவமே
கட்டி மனத்தையாளச் சொல்லு சிவமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL



கொழும்புத்துறை யோக சுவாமிகள்

அறியும் பொருளும் அறிபடு பொருளும்
செறியும் பொருளும் செறியாப் பொகுளும்
குறியும் குணமு மற்ற கோவென
அறிவா ரீண்டு பிறவா ராமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரகர சிவசிவ மறையோனே

அன்பர்தன் சிந்தையில் உறைவோனே
அரகர சிவசிவ மறை யோனே.

பொன்னே மணியே பூங்கோவே
புலவரெல் லாம்புகழ் எங்கோவே.

காணுங் கண்ணிற் கலந்தவனே
கதிரொளி போலெங்கும் நிறைந்தவனே.

ஆணும் பெண்ணும் ஆனவனே
அடியவர் பேணும் வானவனே.

கோணிய பிறையை முடித்தவனே
கொல்புலித் தோலை யுடுத்தவனே.

பாற்கடல் தன்னை அழைத்தவனே
பாரொடு விண்ணுய்ப் பரந்தவனே.

நூற்பொருள் தன்னை விரித்தவனே
நுண்ணிடை யாள்தன் இடத்தவனே.

தில்லையில் ஆடிய சிற்பரனே
சிவசிவ சிவசிவ தற்பரனே.

எல்லையில் லாவருள் தந்தவனே
என்போல் நல்லையில் வந்தவனே.

---

## சற்குரு தெரிசனம்

### பல்லவி

சற்குரு தெரிசனம் சகலபாக்கிய சுகம்
தாளிணை பணிநீ தினம்

### அநுபல்லவி

தாம்தன்னை அறியுமே
சாந்தமும் செறியுமே (சற்குரு)

### சரணம்

பேரன்பு பெருகிடும் பேதமை கருகிடும்
பிரியாப் பிரிய மெல்லாம் பேசாம லகன்றிடும். (சற்குரு)

ஆகம விதிமுறை அகத்தினில் பொருந்திடும்
ஆசாபாச மகலும் நேசானு பூதி வரும். (சற்குரு)

தேவாதி தேவர்களும் செய்வார் பணிவந்து
சீவன் சிவனென்னும் தெளிவு முண்டாகுமே. (சற்குரு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வமத சமரசப் பிரார்த்தனை

சுவாமி சர்வலோக தயாபரா !
ஜீவகோடிகளைப் படைத்து அவரவர்தம் வினைப் போகங்களை
பொசிப்பித்து நல்வழிப் படுத்தும் தயாளுவே !
ஜீவகோடிகளாகிய சகோதரர்கள் என்னாலும் அவர்களால்
நானும் இம்சிக்காமலும் வஞ்சிக்காமலும் இருக்கப்பாருமே!
கள், காமம், கொலை, களவு, பொய் ஆகிய பாதகங்கள்
என்னை வந்து சாராமல் காருமே !
வினைப் போகமாம் என்தேகம் விழுமுன் சற்குருவாய்
வந்து என்னைத் தடுத்தாட் கொள்ளுமே !
நான் ஐம்புல வேடுவரின் கூட்டுறவால் படும்
கஸ்டங்களுக் கோர் அளவிலையே,
அக்கொடியோர் மத்தியினின்றும் மென்மேலும்
துன்புறுவண்ணம் என்னைத் தடுத்தாட்கொள்ளுமே !
அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகா
ஜோதி சொரூபாயா நம !

ஓம் ! ஆமென் !! ஆமின் !!!

(அன்னையாரது தினசரிப் பிரார்த்தனைகளில் ஒன்று)

## எங்கள் குருநாதன்

அன்பு சிவமென்றான் எங்கள் குருநாதன்
ஆங்காரம் அடக்கென்றான் எங்கள் குருநாதன்
இனியது செய்யென்றான் எங்கள் குருநாதன்
ஈவது அறமென்றான் எங்கள் குருநாதன்
உண்மை உயர்வென்றான் எங்கள் குருநாதன்
ஊக்கம் அடையென்றான் எங்கள் குருநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணித் துணியென்ருன் எங்கள் குருநாதன்
ஏர் பிடித்தல் சீரென்ருன் எங்கள் குருநாதன்
ஐயமிடு என்ருன் எங்கள் குருநாதன்
ஒன்றைப் பிடியென்ருன் எங்கள் குருநாதன்
ஓதியுணர் என்ருன் எங்கள் குருநாதன்
ஔவியமாகாதென்ருன் எங்கள் குருநாதன்
ஃஅம்அடையென்ருன் எங்கள் குருநாதன்.

## நாதம்

### நாடினல் நாடியுள் நாதமே ஜோதி

அண்டமுத லாகாசம் பரந்த நாதம்
ஆதியிலே ஔவையார் கண்ட நாதம்
இந்திரனே டுபேந்திரர்கள் போற்று நாதம்
ஈவிரக்க மில்லாதோர் காணு நாதம்
உலகியலிற் பற்றுடையு வுழுத்த மாந்தர்
ஊருராய்த் திரிந்தாலு முணரா நாதம்
எந்தனது குருநாதர் ஊரணிச் சுவாமி
ஏழைமேல் கிருபைவைத் துரைத்த நாதம்
ஐயோடு சவ்வை யகற்று நாதம்
ஒன்றுபட்ட மனதுடையோ ருகந்த நாதம்
ஓங்காரத்துள் ளொளியாய் நின்ற நாதம்
ஔதாரிய முடையாரு மறியா நாதம்
அஃகமென்ற முச்சுடராம் நாதந் தானே.

(நாதம் என்பது ஒளி, ஒலி, ஓசை இசை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமரச நோக்கம்

அரிய குருதிருவருளைப் பெறுதல் வேண்டும்
அன்புறுதி நேர்மையொடு பொறுமை வெண்டும்
நமக்கன்புறுதி நேர்மையொடு பொறுமை வேண்டும்

சரியான சன்மார்க்கம் தழுவ வேண்டும்
சற்சனர்க ளோடுறவு பூணவேண்டும்
நாம் சற்சனர்க ளோடுறவு பூணவேண்டும்

திரிபுடையில் கிருபை விளையாட வேண்டும்
திடமுடனே ஐம்புலனை வெல்ல வேண்டும்
நாம் திடமுடனே ஐம்புலனை வெல்ல வேண்டும்

பெரிய தவயோக நிலைக் குயர்தல் வேண்டும்
பெண்களும் யோகாசனங்கள் பயில வேண்டும்
நாட்டில் பெண்களும் யோகாசனங்கள் பயில வேண்டும்

மத வெறிகளதி விரைவில் ஒழியவேண்டும்
மக்கள் சமுதாயம் நன்கு வாழவேண்டும்
நமது மக்கள் சமுதாயம் நன்கு வாழவேண்டும்

உரிமையுள்ள அருவொளி மாசபைகள் வேண்டும்
உணர்ச்சியுடனுபதேசம் புரிதல் வேண்டும்.—
நாமினி உணர்ச்சியுடனுபதேசம் புரிதல் வேண்டும்

பாரினி லஞ்ஞான விருளகல வேண்டும்
பாமரர் மெய்யறிவுளராய்த் திகழவேண்டும்
பாரிற் பாமரர் மெய்யறிவுளராய்த் திகழவேண்டும்

பரிதியினும் நெடுஞ்சுடராய்ப் புவியில் வாழ்ந்து
பரம்பொருள் மெய்யொளி வெளியுள் கலக்கவேண்டும்
மேலாம் பரம்பொருள் மெய்யருளொளியில் கலக்கவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தத்துவராய சுவாமிகள் குரு பரம்பரை

முதலாசாரியர் ஸ்ரீ கைலாசத்தி லெழுந்தருளிய உமா மகேஸ்வரர், அவர் மாணுக்கர் நந்திகேஸ்வரர், அவர் மாணுக்கர் சனற்குமாரர், அவர் மாணுக்கர் வியாசர், அவர் மாணுக்கர் சூதரிஷி, அவர் மாணுக்கர் கடவுள்நாதர், அவர் வழிவந்த மாணுக்கர் தருவூர்ச்சித்தர், அவர் மாணுக்கர் அருள்முனிவர், அவர் மாணுக்கர் கீழூர்முனிவர், அவர் மாணுக்கர் பரமுனிவர், அவர் மாணுக்கர் திருப்பனந்தாளார், அவர் மாணுக்கர் மதுரைப் புஞ்சைமுனிவர், அவர் மாணுக்கர் வடமுனிவர், அவர் மாணுக்கர் உலகுய்யவந்தார், அவர் மாணுக்கர் திருநடராசர், அவர் மாணுக்கர் சிவப்பிரகாசர், அவர் மாணுக்கர் சுரூபானந்தர், அவர் மாணுக்கர் தத்துவராயர்.

## ஸ்வரூபானந்த சுவாமிகள் துதி

அடியேனை யாள வருண்மேனி சாத்திப்
படிமீது வந்த பரனே—கொடியேனென்
றெண்ணு திமைப்பளவி லிங்ஙனே வீடளித்த
கண்ணு கடைபோகக் கா.

## நேரிசை வெண்பா

என்புன் றலைமன்னு மின்பத் திருக்கழலை
யன்பொன்றி யேத்த வனவரத—யின்பஞ்செய்
தாண்டானே தந்தருள் செய்யல்லது வேறென்றையுநான்
வேண்டா மையுமருள்வாய் மெய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்திரை

செத்துப் பிறக்கக் கொடாதெங்கண் முத்திரை
    செம்பிற் செறிக்கப் படாதெங்கண் முத்திரை
யத்தத்தி லுத்திர மாமெங்கண் முத்திரை
    யாலின்கீழ் நால்வர்க் கரன்சொன்ன முத்திரை.

எண்ணி விலக்கிட் டிடாதெங்கண் முத்திரை
    யெண்ணுவா ரெண்ணங் கடந்திட்ட முத்திரை
பண்ணி யழிக்கப் படாதெங்கண் முத்திரை
    பார்ப்பறப் பார்க்கும் பரஞான முத்திரை.

வெண்ணூலிற் கோவைப் படாதெங்கண் முத்திரை
    வேதமா நூலின் விளைகின்ற முத்திரை
யெண்ணு ணலாத பெருமான் றன்முத்திரை
    பேசற் கரிய பெரியோன்றன் முத்திரை.

## அனுபவமாலை

அஞ்சு கோச வரணை யழித்திட்டு
    வானந்த வறி வாகிய வாசையும்
வஞ்ச மாகு மதுவிட்டு வாழ்வார்க்கு
    மாய வாழ்வை மதிப்ப தினியுண்டோ.

கலவி யென்பதோர் கட்டை யறுத்துக்
    காமன் வாழுங் கருக்குழி தூர்த்தே
யலையிலா வுணர் வாயிட் டிருந்தா
    லமரர் வாழ்பதி யிற்புக வுண்டோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்வரூபானந்த சுவாமிகள் வீட்டுநெறி


அண்ட வுருவிற் பிண்ட முதிக்கும்
ஆழிமீன் போலும் வாழி சிவமுயிர்
இந்துதோற் றெடுக்கம் வந்தபல் லுயிர்கள்
ஈரேழு புவனம் பாரேழு முயிர்நிலை
உள்ளும் புறம்புங் கொள்கையொன் றறவிரு
ஊனை தானே யாது மானது
எழுத்தை யெழுது மெழுத்திலுண் டுறுபொருள்
ஏக மாவது யோக மாகும்
ஐய மின்றி யருளிறை யேசிவம்
ஒருபொரு ளின்றிச் சுரூபனை வணங்கு
ஓதல் வேண்டா தாத னிறைவு
ஔவியம் பேசா தது ரோவ மாகும்
அஃகம் பெற்ற துயிர்க்குயி ரதுவென்
கருமை செம்மை வெண்மை யவனலன்
ஙப்பொரு ளாவ தப்பொரு ளாகுஞ்
சந்ததம் பாதுகை சிந்தையில் வணங்கு
ஞத்தி யுடையவர் முத்தி பெறுவர்கள்
அடவிய கடத்தைத் தடவிநிற் பதனில்
அணக்கோ ணற்றுகிற் பிணக்கறு முத்தி
தற்பதந் துவம்பத நிற்ப தசிபதம்
நந்தி திருவடி சிந்திநா டோறும்
பந்த மென்பது சிந்தியாது
மனன மரிக்கிற் சனன மரிக்கு
மயக்கற விருந்து மயக்கந் தவிர்
துன்பத்தைக் கெடுத்துப் பரந்தனை வணங்
குலக்கந் தியானங் கலக்க மறுது
வந்தனை யடங்கிற் சிந்தனை சிவமாம்
அழகிய திருநடந் தொழுவத சிந்தியம்
இளம்பிறை சூடியே வளந்தரு சுடரொளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை யறிவது பின்ன மறுவது
அனந்த வறமே மனந்தனை மரித்திரு
கவலை நின்றிடிற் சிவலை நின்றிடுங்
கால மூன்றுநின் பாலுற வறிந்திரு
கிரக வுதயந்தரு முடிவி லுயிர்நிலை
கீழ்க்குல ஞான வாழ்க்கை யிலாதார்
குருவொளி பிண்டந் தருமுயிர்க் குணர்வு
கூத்தும் பலமு மேத்துவ தசிந்தியங்
கெடுத்த சுழுனையி லெடுத்த துணர்வொளி
கேட லுணர்வொளி யாடிய சிவமே
கையது கூப்பி மெய்யுற வணங்கு
கொண்ட நிலையது கொண்டி டாநிலை
கோணு நிலையது காணு நிலையே
கௌவை யறுவது செவ்வை யுறுபொருள்
சத்தாதி யைந்தினு மொத்த தொருபொருள்
சாதி குலம தோது சுக்கிலஞ்
சிந்தனை யடக்குதல் வந்தனை யாகுஞ்
சீதள கமல பாதுகை பணிந்திரு
சுருதியம் பொருளே பரிதியம் பொருளது
சூழவே ழேழது வாழ்பயி ராகுஞ்
செய்யுஞ் செயலவன் செய்யுஞ் செயலே
சேட்டர்தா ளிணையை நாட்டிநீ வணங்கு
சைவ நெறியே யுய்யு நெறியது
சொர்க்க நரக முற்பவ விலங்கு
சோம்புற வாசை யாம்பொழு தறுத்திரு
ஞானபரை யந்த மோனஞ் சிவமே
ஞெகிழிப் பொறிபோ னின்றது சிவையே
ஞொல்கிய மனமுடை யோர்நுண் ணியரே
தகுதி யுற்றவர் பகுதியற்றவர்
தாக்கொன் றறவே நொக்கினை நோக்குத்
திடம்பர ஞானி யுடம்பு நற்சிவந்
தீர விருந்து பாரிரு சரணந்
துஞ்சல் விழித்தன் மிஞ்சல் விட்டிரு
தூங்கும் யோகம் பாங்கு பெறுது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பூலோக பாண்டியகுரு அமுதானந்த சுவாமிகள்

உத்தமர்கள் போற்றும் உயர்ஞான தேசிகனே
அத்தி யுரிபோர்த்து அரனுருவாய் நின்றவனே
அத்தனருள் பெறநான் அடிமையாய்க் கொண்டவனே
சித்திபெற அருள்வாய் சின்மயமாஞ் சற்குருவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெள்ளி யறிந்து வள்ளலை வணங்கு
தேசிகன் சிவமென் றுசையொன் றறநில்
தைய லுருவது மைய லுருவே
தொந்தனை யறவே நந்தியர்ச் சனைசெய்
தோற்றுஞ் சுடருள மேற்றிய தீபம்
நன்றிசெய் குருவை யென்றும் வணங்கு
நாட்டஞ் சொல்லும் வீட்டி னெறியை
நிருத்தஞ் செய்சிவன் குருத்தவ ராசன்
நீரும் பூவுஞ் சேருமன் பிதயம்
நுண்ணிய பொருளை நண்ணியர்ச் சனைசெய்
நூலொடு குருவுரை வேலைசிற் றூறல்
நெட்டை யொன்றற விட்டு நீயிரு
நேயந் தன்னிலேயுஞ் சுடரொளி
நைந்துநைந் துருகிச் சுந்தர வடிதொழு
நொடிப்பொழு தாசை யறவடி பரவு
நோக்கற விருந்து சேக்கையை நோக்கு
நௌவி விழியுமை செவ்வி சிவனுரு
பசுபதி பாசம் விசுவமெய் யறிவு
பாசந் தவிர வீசனை வணங்கு
பிண்டந் தனிலு மண்ட முதிக்கும்
பீதம் பிரபை யோதுமை பரமன்
புண்ணியர் மண்ணி லெண்ணிய ஞானிகள்
பூண்டதா ளிணையை வேண்டி வணங்கு
பெருகும் பிறவி யருகி யின்புறும்
பேத மறவே நாதனை வணங்கு
பையர வரையனே பொய்யறு பரமன்
பொய்யு மெய்யுஞ் சையெனு மவத்தை
போக்கு வரவற வாழ்க்கையி லுணர்ந்திரு
பௌவப் பிறவி செவ்விதை கருத்து
மனமெனுங் கடத்திற் றனமென வறிவு
மாண்ட வுடலுயிர் பூண்ட வுறுபொருள்
மிக்கவித் தங்குர மொக்குநற் பொருளுயிற்
மீண்டுமி முளையிற் காண்டதா முயிருடன்
முந்துட லுயிரிற் பிந்த வுதிக்கு

83515


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று காலமுந் தோன்றுமு னிடத்தின்
மெய்யு முடம்பு பொய்யு முடம்பு
மேலைச் செய்யிற் காலைப் பயிரிடு
மையல தறவே செய்பயிர் வளர்த்திரு
மொட்டும் பூவுஞ் சிட்டனுங் குருவு
மோன முதிக்கின் ஞான முதிக்கும்
மௌன வுண்மையே யெவனுறு மவன் சிவம்
யானென தறிகி லானது முத்தி
யூகித்துணர்வது போகிற் கதியது
யோகமீ தான மாகி யாறிநில்
வடிவ திருந்த படியது வாகும்
வாக்கியமெய்ப் பொருளை யாக்கிய துரைத்திரு
விடாம லிருந்து கெடாது கெடு
வீட்டின் பத்தைக் கூட்டுந் தேட்டறில்
வெள்ளையுஞ் சிவப்பும் வள்ளல் பாதுகை
வேண்டி யிருந்து வேண்டல் வேண்டாமை
வைப்பது பாதுகை மெய்ப்பது மதுவே.

## தபோவனம்

ஆர ணக்கிளி கொஞ்சு தபோவன
மாக மக்குயில் கூவு தபோவனம்
பூர ணத்தரி வாழு தபோவனம்
பொருவில் சிற்கன மாய தபோவனம்
சமயி கட்கதி தூர தபோவனஞ்
சமத மத்திரள் சார்வ தபோவனம்
நமையு மிப்படி வைத்த தபோவன
நாத ஞரரு ளாய தபோவனம்.



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாண்டியுரைவாரம்

(பாண்டியுரை வாரமென்பது — பாண்டித்திய வுரையாம்)

ஏற்றப் பானைபோ லிவ்வுடலை யென்று
மென்று நீரிற் றேய்த்தக்காலும்
பேர்த்துப் பேர்த்துமிது வூத்தையன்றே
பேத மறுத்திட வற்றே சொல்லீர்.

அல்ல லுடலைக் கழித்து அறிவே
வடிவென் றுணர்ந் திருப் பார்க்குச்
சொல்லக் கடவதொன் றுண்டோ
சுருதிக ளூற்றி வளவிறந்தத்தை.

கானலை நீரென் றுணர்ந்து கரையுந்
திரையு நுரையுங் கண் டாற்போற்
றனல்லா னூனத்தா னுக்கிச் சாத்திர
கோ த்திரஞ் சாற்றுகின் றரே.

புத்தி விகற்பத்தை விட்டுப் போதம்
வடிவென் றுணர் ந்திருப் பார்க்கு
மித்தனை கூத்தாடல் வேண்டுமோ
விரவி யுதித்தா லிருள்போ மிடத்து.

பரிதி யொருவ னுதிக்கப் பலகோடி
யண்டங்கள் பேதமா னற்போற்
சுருதி முடிவி னுதிக்கச் சொல்லும்
பொருளுந் துலங்கிடுங் காணே.

பாத்திர பேதத்தி னாலே பலகோடி
யிரவிகள் பேதமா னற்போ
னேத்திர மான பிரம நிகரிற்
ப்ரபஞ்சமு மாயுதித் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியை குறிப்ப திலக்காய்
  மாமரத் துச்சியைக்காட்டி னுற்போற்
பதியைக் குறிப்பதி லக்காய்ப்
  பஞ்சகோ சச்சட்டை சாத்தி னுரே.

செகத்தெங்கு நிறைந்தவச் சிவனூர்தம்மைச்
  சிந்தையி லன்றித் தெளிவு ருர்காண்
முகத்தை முகத்தாலே காணலாமோ
  முன்கையிற் கண்ணுடி தாவெனுழிய.

ஊனிலே யொன்பது வாசல்விட்டங்
  கொருவனைக்காவ லிருத்தி வைத்தவ்
வூனி லொருவனும் போனவாறே
  யொன்பது வாசலு நாய்புகுங் காணே.

ஓங்கு முடியைத் தலையில்வைக்க
  வுலகமெல் லாமரசாளு மாப்போ
லாங்காரந் தனையறி வோடே கூட்ட
  வகிலமு நாமா யிருக்க லாமே.

நெஞ்சிலே கட்டை யடுக்கவிட்டு
  நீட்டி நிமிர்ந்து கிடப்ப தன்முன்
னஞ்சையு முள்ளே யடக்கிக்கொண்டே
  யானந்த மாயறி வாகவல் லீரே.

அம்மையு மப்பனுங் கண்டிருக்க
  வந்தக னுருயிர் கொள்வதன் முன்ன
மும்மையு மூனையும் வேறதாக வுள்ள
  பொழுதே யுணரவல் லீரே.

மக்களுங் கத்த மனைவிகத்த
  மாய வுடலெரி கொள்வதன் முன்ன
நிட்கள மான வறிவுதன்னை
  நும்வடி வாக நினையவல்லீரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவினைப் பாசங் கழுத்தினிலிட் டேற
விறங்க விழிப்பதன் முன்னங்
குருவினைச் சென்று பணிவீராகிற்
கோதி லறிவோடே கூட லாமே.

போத வடிவுதனை மறந்து
பூமிக்கே வந்து பிறந்த வாறே
தாதா தவசியென் றேசிச் சங்கேதித்துத்
தம் வடிவிழந்தாரே.

தன்மய மான வுணர்வயர்த்துத்
தரணியில் வந்துபிறந்த வாறே
யென்மக ளுரென் றெடுத்துக்கொள்ள
யானுன் மகனென் றிசைந்திருந் தாரே.

தளையு மிரண்டுள தண்டொன்றத்தைத்
தாமே யிடுவாருந் தாங்கு வாருங்
களையும் படியறி யாமையாலே
காவித் திருந்தவா கண்டுகொள் ளீரே.

வானாதி பூதங்க டோற்றுகைக்கும்
வான்கருத் தும்புலன் றோற்றுகைக்கு
மூனாதி பேதங்கடொற்றுகைக்கு
முண்மையு மாயுணர் வாயிருந்தானே.

போது புலர்ந்து புகுந்தனையும் புத்தியை
யெங்கேனும் போக விட்டுத்
தூதுவர் வந்து புகுந்தவாறே
துடைகள் பறக்கத் தொடங்கி னாரே.

கொத்து முதலியொருவ னுள்ளனவன்
கொள்வது மில்லைக் கொடுப்பது மில்லைப்
பத்துக் கூலிபத்துச்சே வகருமவன்
பார்வையா லேபடை யாயி னாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லும் புலிபோ லுயிர்பருகுங்
கூற்றத்தின் வாயிற் குறுகி டாதே
சொல்லு மனமுமிறந்து நின்ற
சோதிநா மென்று சுகிக்கவல் லீரே.

## அறிவு

போகாத மாயையைப் போக்கிடலாவதும்
புண்ணிய பாவம் புறத்திட லாவது
மாகா தழியா திருந்திட லாவது
மறிவே வடிவா யிருந்திடி னல்லவோ.

என்னிலே யாவையுங் கண்டிட லாவதும்
யாவையு மென்னையுங் கண்டிட லாவது
மன்னியங் கண்டிலோ மென்றிட லாவது
மறிவே வடிவா யிருந்திடி னல்லவோ.

மோகாதி யெல்லா முறிந்திட லாவது
முற்றுமுற் கன்மங்க ளற்றிட லாவது
மாகா தழியா திருந்திட லாவது
மறிவே வடிவா யிருந்திடி னல்லவோ.

இந்தப் பிறப்பினின் றேறிட லாவது
மேகாந்த மாகி யிருந்திட லாவது
மந்தக் கரண மறுத்திட லாவது
மறிவே வடிவா யிருந்திடி னல்லவோ.

நற்செய் தவங்களு மற்றிட லாவது
நானெனு மாங்கார நச்சற லாவது
மற்சனை யெல்லா மறவிட லாவது
மறிவே வடிவா யிருந்திடி னல்லவோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்பாட்டி

விரகற்ற குடத்திலே பாம்படைப்போம்
வேதாந்த வெளியிலே விட்டாட்டுவோங்
கரணங்கள் பிடித்தங்கே பிரையிடுவோங்
காலங் கழியவே தப்பிடுவோம்

பரவிய மும்மல மாயையென்னும்
பாம்புதான் சீறிக் கடித்தபோது
வுரையற்ற மந்திரங் கொண்டுமீட்போ
முள்ளுளார் வாழநின் றடாய்பாம்பே.

சித்திர முத்தி தருமென்றெண்ணிச்
சிந்தித்து நாளுந் திகைத்திராதே
பத்திர நிற்கவுறை குத்துமோதான்
பார்த்தானைப் பார்த்துநின் றடாய்பாம்பே.

ஓங்காரத் துட்புகுந் துச்சியேறி
யொன்பது துவாரத்தி னுட்புகுந்து
தூங்காமை தூங்கிநின் றடாய்பாம்பே
தொந்தங் கடந்தோமென் றடாய்பாம்பே.

ஆருரு மிங்கேயம் பலமுமிங்கே
யாடரவக் கிண்கிணிக் காலுமிங்கே
பேரூரு மிடபவா கனமுமிங்கே
பிறப்பிறப் பற்றிடந் தானுமிங்கே
சீராருஞ் சிவஞான போதந்தன்னைத்
தெளிந்து தெளிந்துநின் றடாய்பாம்பே.

83515



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL

# கழல்

ஒன்றேகாண் பெண்ணே யுலகம் பதினாலு
முள்ளது போதமென் றூடாய்கழ
லொழிவற நின்றோமென் றூடாய் கழல்.

இரண்டுகாண் பெண்ணே யிடைபிங் கலைக
ளிரண்டுமொன் றானதென் றூடாய்கழ
லேகாந்த மானோமென் றூடாய் கழல்.

மூன்றுகாண் பெண்ணே முடிவான மண்டில
முத்திக்கு வித்தாமென் றூடாய் கழன்
முந்நிலா வீசுதென் றூடாய்கழல்.


நாலுகாண் பெண்ணே நாடிநா னுடியுண்
ணுதமே சோதியென் றூடாய்கழ
னம்மை யுணர்ந்தோமென் றூடாய்கழல்.

அஞ்சுகாண் பெண்ணே யறிவே நமக்கென்றுந்
தஞ்சமாய் நின்றதென் றூடாய்கழ
ருனேதா னானதென் றூடாய் கழல்.

ஆறுகாண் பெண்ணே யல்லல் கழிந்தபின்
னானந்த மானோமென் றூடாய்கழ
லாசை யொழிந்தோமென் றூடாய்கழல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தவத்திரு. ஸ்ரீ சத் சித்ரமுத்தடிகள்

மண்டபங் காம்பதனை ந[illegible]ணிப் பவமொழியக்
கண்மண் டளங் களப்பிக் கருணைத் திருவொளியாய்
பிண்டமதிலுறை சித்திர முத்தப்பா - உனை
மண்டலத்தில் நாளும் தொழுவேன் மறவேன் இனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழுகாண் பெண்ணே யெல்லா நிலைகளு
மிந்திர ஞாலமென் றூடாய்கழ
லெமக்கழி வில்லையென் றூடாய்கழல்.

எட்டுகாண் பெண்ணே சுற்றக் குழாமென்னுங்
கட்டதை விட்டோமென் றூடாய்கழல்
காணாது கண்டோமென் றூடாய்கழல்.

ஒன்பதாம் பெண்ணே யுள்ளே தெளிந்தபின்
மின்போலும் போதமென் றூடாய்கழல்
வேத முடிவதென் றூடாய்கழல்.

பத்துக்காண் பெண்ணே பரமே பரமாகப்
பற்றற் றிருந்தோமென் றூடாய்கழல்
பத்தி முடிவதென் றூடாய்கழல்.

ஆடுங் கழலா மடியி லொளித்தக்காற்
றேடுவ தில்லையென் றூடாய்கழல்
றிருவடி யல்லதென் றூடாய்கழல்.

## பிரார்த்தனை

ஊனா யுயிரா யுணர்வா யுருகிக் கரைந்தொழியாத்
தேனாகி நின்றுதித் திதிடு வாய்சிவ னேசிறியே
னூனா றுரோமஞ் சிலிப்பவொண் கண்ணீ ரருவிதர
வானா துருக வடியே னுளமென் றணுகுவதே.

அருளது வேவடி வாகிப் புவியில்வந் தாண்டுகொண்டு
மருளது தீர மறவா நினையா வரமருளித்
தெருளது செய்த சிவப்பிர காசச் செழுங்கனியே
யருளது வேயுடை யாயழியா யிந்த வூனினையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதியின்னவிடம் என்பது

பதியின்ன விடமென்று குருவின் சொல்லே
பரப்பிலே விடுகாதே தலேரெண்டாகும்
விதியின்ன யிடமென்று சொல்லக்கேளு
விண்ணுன வுண்ணுக் கிலண்ணுக்கப்பா
மதிரவியும் பூரணமும் கண்வாய்மூக்கு
மகத்தான செவியோடு பரிசமெட்டும்
பதிய வடஞ்சுழி முனையென் றிதற்கேபேராம்
பகருவார் சொர்க்கமென்றுங் கயிலாசமென்றே.

கைலாசம் வைகுந்தம் தெய்வலோகம்
காசி கன்னியாகுமரி சேதுவென்றும்
மயிலாகு மேகமென்றும் நாதமென்று
மாய்கையென்று மின்னலென்று மவுனமென்றும்
துயிலாத வாடையென்றுஞ் சூட்சமென்றும்
சொல்லாத விடமென்று மொடுக்கமென்றுந்
தையலாளடி நடுமுடிதா னென்றும்
தாயான வஸ்துவென்றும் பதியின்பேரே

(அகத்தீசர்)

## சடம் விழுந்தால்

ஏதப்பா பெண்டிடீராலாவதேது
யீன்றெடுத்த பிள்ளைகளாலாவதேது
கோதப்பா பந்துவினுலாவதேது
கொண்டதினுல் கொடுத்ததினுலாவதேது
வாதப்பாசொல்லி நித்தம்பிரட்டால்தேடும்
மகத்தான திரவியத்தாலாவதென்ன
போதப்பாபோதும் என்ற போதம்பார்த்தால்
புகழுனக் குயிதுலாபம் புகழ்ந்துகானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்ந்துநின்ற வுலகத்தில் வந்துயானும்
புத்திரனைப் பெருமலையோ மலடனுனேன்
நிகழ்ந்து இனிக்கதியேது தற்பனங்களேது
என்செய்வேன் கடைத்தேற—எண்ணுமாண்பர்
மகிழ்ந்துநீ புத்திரரைப் பெற்ருயானல்
மக்களாற் கடைத்தேற வண்மையுண்டோ
அகிழ்ந்துநின்ற பிள்ளை வேதாந்தியாகில்
அண்டத்திற் சேரவிவள் பிதிர்குநன்றே.

( விட்டகுறை )

நன்ருன தாயவள்தான் மோகமுற்று
நலமான பிதாவோடு கலந்ததாலே.
ஒன்ருன விந்தாலே விட்டகுறைவந்து
வுருத்தரிக்கு மவ்வுருவை யவளவனுங்காணுர்
கன்ருன கெற்பத்தில் சுமந்துபெற்று
கண்ணோடு மூக்கோடு போற்றியாட்டி
நின்ருன பாசத்தால் வளர்த்தாள்மாதா
நேசமாய் வித்தையெல்லாம் பிதாச்சொன்னுரே.

சொன்னதோர் பிதாவுக்கு மிவனுலென்ன
சுமந்துபெற்ற மாதாவுக்கிவனுலென்ன
பன்னதோர் பலகலையாங் காமக்கூத்துப்
பழகினுன் கன்மமென்ற காமவித்தை
பொன்னின தோரித்தனையு மாட்டியாட்ட
புகழான சிற்றின்ப மாயமாச்சு
என்னதோரென்ன சொல்வேனய்யோ அய்யோ
எழுநரகந் தனிலுழல விருத்தல்நன்றே.

நன்ருனுபுத்திரன் பூரணத்திற்சேர்ந்தால்
நலமானபிதிர் நூறுவமிசமுத்தி
நன்ருன மாதாவின் வமிசம்நூறு
நண்பாக முத்திபெறும் பாருபாரு
நன்ருன புத்திரன்தான் ஆகாவிட்டால்
நரகத்துக்கேதுவா யெய்துமய்யோ
நன்ருன புத்திவந்தால் சாதகந்தான் கேளும்
நாதாந்தப் பெருவெளியை நாடிப்பாரே. —கொங்கனவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

# மௌனம்



## மங்களம்

மூவர் வாழி மங்களம் புகழ்
முனிவர் வாழி மங்களம்
ஜீவர் வாழி மங்களம் — சிவ
பக்தர் வாழி மங்களம்,

KOHA
JPL

நாடு முழுதும் மங்களமருள்
ஞானசபைகள் மங்களம்
அறநெறிகளும் மங்களம் — புவி
அறிஞர் கடமை மங்களம், (மூவர்)

திருவருளொளி மங்களம் — மக்கள்
தீர்க்க வாழ்க்கையும் மங்களம்
மங்களம் புகழ் மங்களம் உல
கெங்கும் புகழ மங்களம். (மூவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்த மேடம்



ஆகக் கோவிலில் அமர் ஓங்கார
ஏகப் பொருளை யிறஞ்சுவோம் யாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org